தினகரன்
ஒரு புதிய அனுபவம்

11.1.2016 • தினகரன் • சென்னை 15

## வித்யாசாகர் மகளிர் கல்லூரியில்

# பொங்கல் விழா கொண்டாட்டம்



▸ செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் நடந்த தை திருநாள் விழாவில், மாணவிகள் பொங்கலிட்டு கொண்டாடினர்.

செங்கல்பட்டு, ஜன.11: செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியின் முத்தமிழ் மன்றம் சார்பில் பொங்கல் விழா, கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

வித்தியாசாகர் கல்விக்குழும தாளாளர் விகாஸசுரானா தலைமை வகித்தார். பொருளாளர் சுரேஷ் கண்காரியா, இயக்குனர் ஆச்சார்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சென்னை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் திருமகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொங்கல் விழாவை தொடங்கிவைத்தார். அப்போது தமிழின் தொன்மைகள், பொங்கல் விழாவின் சிறப்புகள், விவசாயத்தின் சிறப்புகள், ஜல்லிக்கட்டின் பாரம்பரியம் ஆகியவை குறித்து விரிவாக பேசினார்.

இதில் கல்லூரி மாணவிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு புதுப்பானையில் பொங்கல் வைத்து சூரிய வழிபாடு செய்தனர்.

பின்னர் பாரம்பரிய போட்டிகளான வில்லுப்பாட்டு, நாடகம், பேச்சுபோட்டி, பாட்டு போட்டி ஆகியவை நடத்தப்பட்டது.

விழாவில் கல்லூரி முதல்வர் ஷாலினிகுமார், தமிழ்த்துறை தலைவர் ரேகா உட்பட பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.